# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2264/4 - 2022 ජනවාරි මස 24 වැනි සඳුදා - 2022.01.24

2264/4 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது குறிப்பு இல.: திபிரசெ/1/8/3/74, (இஅத்/மெனும்/2021/07)*

*காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/6/2019/எச்டப்ளிவ்/247*

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரியகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், தெமடகொட கிராம அலுவலர் பிரிவில், தெமடகொட கிராமத்தில் (கொழும்பு மா நகர சபை எல்லைக்கு உட்பட்டது) அமைந்துள்ள, கொழும்பு மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரை பட இல. கொ 9974 இல் விபரிக்கப்பட்டுள்ள 0.1413 ஹெக்டயார் இல் 1 தொடக்கம் 3 வரை உள்ள காணித் துண்டுகள் (3 துண்டுகள்) எல்லைகள்:*

***01. துண்டு இல. 1***

*காணியின் பெயர்: வரிப்பண இல. 752/5, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், சீமெந்து கல் வரட்சியான இடம்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: கொழும்பு 9, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, இல. 752/5 முகவரியில் வசிக்கும் சாந்த எந்தோனி தானியார் நிறுவனம் (காணி எடுத்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0042 ஹெக்டயார்.*

***02. துண்டு இல. 2***

*காணியின் பெயர்: வரிப்பண இல. 752, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், சீமெந்து கல் வரட்சியான இடம்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: கொழும்பு 9, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, இல. 752 முகவரியில் வசிக்கும் ஒரஜின் சிடி தானியார் நிறுவனம் (காணி எடுத்தலுக்கு அவசியமாக உள்ளது); விஸ்தீரணம்: 0.0022 ஹெக்டயார்.*

***03. துண்டு இல. 3***

*காணியின் பெயர்: தெமடகொட கால்வாய்; காணியின் விபரம்: கால்வாய்; காணியின் உரிமை கோருவோர்: அரசு; காணியின் ஆரம்ப உரிமை கோருவோர்: - (புதிய களனி பாலம்*

தொடக்கம் ராஜகிரிய வரையிலான மேம்பால அதிவேக வீதியை விஸ்தரிப்பதற்கு அவசியமாக உள்ளது, ஆ. வ. கொ 8153 இன் 11 ஆவது துண்டு மற்றும் இல. தெரியாது கால்வாயின் பகுதி); விஸ்தீரணம்: 0.1349 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022, பெப்புருவரி 21 ஆந் திகதி மு.ப.09.30 மணி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022, பெப்புருவரி 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய.

EOG 01 - 0237

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.